# மனித உரிமைகள் மீட்பு

மாதமிருமுறை இதழ்

உரிமை - 8 மீட்பு - 13 அக்டோபர் 1 - 15 | 2023 விலை 20 / -




# பெண்களின் உழைப்பை முறையாக அங்கீகரிக்கத்தான் 'மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்'


UMMANI
TEA DUST
SELECTED QUALITY
HYGIENIC PACKING
UMMANI
TEA DUST
CTC TEA DUST
100g
தமிழகம் முழுவதும்
மாவட்ட வாரியாக
முன் பணம் இல்லாமல்
டீலர்கள் தேவை!
50g - ₹.22
100g - ₹.36
250g - ₹.70
500g - ₹.140
1kg - ₹.280
தங்கள் தொடர்புக்கு:
9952119066

# மனித உரிமைகள் மீட்பு

## (மாத இருமுறை இதழ்)

வெளியீட்டாளர்: M. அப்துல்ரகுமான்

உரிமை-8 மீட்பு-13 அக்டோபர் 1-15 | 2023



**ஆசிரியர்:** நீலகிரி K. மதுசூதனன்.
**இணை ஆசிரியர்:** புதுவை K. ராஜாராம்குமார்.
**தொகுப்பு ஆசிரியர்:** வேலூர் M. ராமச்சந்திரன்.
**சிறப்பு உதவி ஆசிரியர்:** தேனி AR. நாசர்கான்.
**சிறப்பு துணை ஆசிரியர்:** நாகர்கோயில் Dr. S முகம்மது அலி,
**சிறப்பு செய்தி ஆசிரியர்:** வாணியம்பாடி G. வெங்கடேசன்.
**பொறுப்பு ஆசிரியர்:** பெரம்பலூர் M. இளவரசன்.
**தலைமை செய்தி ஆசிரியர்:** நாகர்கோயில் C.J. சுதர்மன்.
**கௌரவ ஆசிரியர்:** கிருஷ்ணகிரி Dr. குமரவேல்.
**தலைமை ஆசிரியர்கள்:** Dr. முகம்மது காசிம், Dr. K. கலைச்செல்வன்.
**முதன்மை ஆசிரியர்கள்:** பரமகுடி S. பதர்னிஷாபேகம், R.M நந்தினி, T. அரவிந்தன், Dr. P. முருகேசன், கேரளா P.K. பிரதிஷ், SGM. ரமேஷ்.

**நிர்வாக ஆசிரியர்கள்:**
Dr M. ஹரிகிருஷ்ணன், M. காதர் முகைதீன்.

**கௌரவ இணை ஆசிரியர்கள்:** R. அகிலேஷ், A. கேம்ராஜ் N. அன்பழகன், A. பிரபாகரன், S.A. சையதுமுகைதீன் ஆலிம், S. லோக சுந்தரம், A.விஜி, R. ரத்தீஷ், C.சதிஷ்.

**கௌரவ செய்தி ஆசிரியர்கள்:**
S. ஆல்பர்ட் பிரான்சிஸ் சேவியர், R. சந்திரபோஸ்.

**பொறுப்பு இணை ஆசிரியர்கள்:** S. ரமேஷ், R. சாம் எட்வர்ட்.

**செய்தி ஆசிரியர்கள்:**
R. M. பரமகுடி ராமச்சந்திரன், புதுவை S செல்வமணி.

**கௌரவ இணை ஆசிரியர்:** A.R. பத்மநாதன், RNS. வெங்கடேஷ்வரா

**முதன்மை துணை ஆசிரியர்கள்:** M. தனராஜ், M. லோகேஷ்.

**பொறுப்பு இணை ஆசிரியர்கள்:**
D. கென்னடி, L.S. மனோகரன், S. தினேஷ்ராஜ், S. முத்து இப்ராகிம் ஷா, M. ஜெய்பிரசாத்.

**தலைமை இணை ஆசிரியர்கள்:**
G. திருச்செந்தில்வேல், T. செந்தில்குமார், ST ஜோசப், K. சதீசன்.

**தலைமை கௌரவ ஆசிரியர்கள்:**
M. கார்த்திக், A. ஷபீக் ரகுமான்.

**தொகுப்பு இணை ஆசிரியர்கள்:**
M. விஜயகுமார், S.B. ரவிக்குமார்.

**தொகுப்பு துணை ஆசிரியர்கள்:**
C. பெருமாள், J. கோவிந்தராஜ், C. அய்யாவு, R. தாகிர், K. ரவிச்சந்திரன்.

**துணை ஆசிரியர்கள்:**
D.சுரேஷ்குமார், G.சுரேஷ், A. மன்சூர், தனுஷ் பாண்டியன், J தாஹிர்.

**கௌரவ துணை ஆசிரியர்கள்:**
P. சதீஷ், G. அருள்செல்வன், D. கோபிநாத், P. உதயகுமார், A.T. அஷ்ரப், S. ரவிக்குமார்.

**உதவி ஆசிரியர் குழு:**
K. நமச்சிவாயம், S. சரவணன், M.S. ஆரோக்கியசாமி, M. விஜயேந்திரன். K. தம்புசாமி, முசா(எ)சாகுல் ஹமீது, Dr. ஸ்டேன்லி மோசஸ், Dr. L. ரமேஷ், A.S. அருண்குமார், A. முஜிபுர் ரகுமான், M. மாலா, M. ஆனந்தராஜ், AMS. ஹம்சத்அலி, R. சுப்பு, D. ராஜீவ்காந்தி, S. முரளிதரன், T. சுதாகர், S. கலாநிதி, G. கலையரசன், M. நாகராஜ், கிஷோர் குமார், ஜெயின் சன்சா, R.மலர்கொடி, RD ராம்குமார், A. ஆரோக்கியசாமி.

**நிருபர்கள்:**
M. தயாநிதி, S. சுல்தான்அலாவுதீன், M.சுரேஷ்குமார், M. செய்யது சகாபுதீன், S. சீனிவாசன், S. கிருஷ்ணன், P. வேல்முருகன், A. பார்த்திபன், S. சுரேஷ், S. சுப்ரமணி, லாசரஸ் கோவல், D. வில்வநாதன், G. ஜாபர் அலி, Dr.A. அருள்சாமி, V. முத்துகுமரேசன், S. சுந்தரமூர்த்தி, C. பிரபாசிங், M.J. சீனிவாசன், B. செல்வமணி, Dr. முஸ்தபா, S. லோகநாதன், A. முகமது தௌபிக், M. ஈஸ்வரி, V. ராஜாமுகமது, I. இப்ராஹிம், S.S. சஹாபுதீன், A. முகமது இதிரீஸ், R. ஜெயாகிருஷ்ணன், K. ரஜமோனி, A. விஜயசிங்கம், G. குமரேசன், M. அஹமத்முஸ்தபா ஆலிம், M. தமிழ்செல்வன், Y. முபாரக், ரியாஸ் அகமது, S. முகமது ஷெரீப், முஜிபூர்ரகுமான், S. சசிகுமார், R. ரவி, A. அமிர்தவேல், Y. மைதின் ஷசா, V. செல்வராஜ், S. சபாபதி, Dr. டார்வின் ஜான், ஜெயசுனிதா, R. சுதாகர், A. செல்வராஜ், C. அய்யாவு, K. சின்னராஜா, N. சுரேஷ், Y. முபாரக் அலி, S. ரியால் அகமது, M. கோவிந்தராசு, முரளி (எ) பிரேம்குமார், S. பாலமுருகன், S. தென்னரசு, Dr. ஜான் டைட்டஸ் இம்மானுவேல், R. பிரஸ்டன்ட், R. டேனியல், சத்திய நாராயணன், இர்பான், W. பீட்டர், கார்த்திகேயன், சரவணன், ஜான் மார்க், கோபாலகிருஷ்ணன், B. புஷ்பலதா, C. பெருமாள், K.A. செல்வராஜ், K. குணசேகரன், M. கலந்தர் முகைதின், S. சுந்தரமூர்த்தி, M. சுரேஷ், P. சிவகாமி, உபகாரம், ஆறுமுகம், A. பாலசுப்பரமணியன், தாமரைகனி, K. மணிகண்டன், M. பாலமுருகன், R. நாகராஜன், வேலுச்சாமி, K.S.சசிகுமார், L. ராஜகணபதி, A. ஜாபீர், M.மனோஜ், S. வெங்கடேஷ்குமார், G.ஜெயபிரகாஷ், S.ரபி, N.ஜெய்கணேஷ், M.ராஜா, M.தயாளன், K. விஜயகுமார், P. கிரேசி எலிசபத்மேரி, A.சக்திவேலு, V.சக்திவேல், D.சிவப்பிரகாசம், R.விவேக்கமல், K.ராஜா, H. ஹாஜா மைதின், R. ஜீவனந்தம், S. ஜான்சன், T. ஜெயசந்திரன், முபாரக் அலி, ராஜா முகமது, ரஸியாபேகம், சுவைஹாபேகம், M. மல்லிகா, முகமது அஜீஸ் K. ராஜ்குமார், V. தசரதன்.

**சட்ட ஆலோசகர்கள்:**
R. சிவக்குமார் BA BL (மதுரை),
R. சீதா BA BL (பட்டுக்கோட்டை), C. பாலாஜி BA BL (திருச்சி),
M. ஞானசேகரன் BA BL (பொன்னமராவதி),
K. கேசவமூர்த்தி BA BL (தஞ்சாவூர்),
R. S. ராஜேந்திரன் BA LLB (வேதாரண்யம்),
C. முருகன் BA BL (நாகப்பட்டினம்),
D.G. தினகரன் BA LLB (கிருஷ்ணகிரி),
S. மோகன் காந்தி BA BL (ஒசூர்).

**புகைப்பட நிருபர்கள்:**
AMS. சல்மான் அஹமது, A. குர்சித் ஆலம் கான், R. ரவி, V. வித்யாவீரப்பன், M. அருண், Dr.R. செல்வராணி. K. ஷக்கீனா சொர்ணலதா, மதிவிழி.



**இந்த இதழ் குறித்த அனைத்து தொடர்புகளுக்கும் முகவரி:**
ஆசிரியர்,
**மனித உரிமைகள் மீட்பு (மாத இருமுறை இதழ்)**
எண்:2/115D1, ஆன்டாஞ்சிரா, கொன்னச்சால் Po,
எருமாடு, பந்தலூர் தாலூக்கா, நீலகிரி மாவட்டம்,
தமிழ்நாடு-643239. செல்: 9543410000
Mail: manithurimaigalmeetpu@gmail.com
http://internationalhumanrightswatch.org


"மனித உரிமைகள் மீட்பு" இப்பொழுது ஆன்லைன் செய்திகளாய் உலகமெங்கும். https://youtube.com/@manithaurimaigalmeetpu5936 என்ற Youtube மூலமாக காணலாம் மற்றும் சமூக வலைத்தளத்தில் பகிரலாம்.

எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உயர்நீதிமன்றத்தின் வரம்புக்கு மட்டுமே உட்பட்டவை. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு மனித உரிமைகள் மீட்பு இதழ் நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் சிறப்பு கட்டுரையாளர்கள் இன் கருத்துகள் அவர்களின் சொந்த கருத்துகளே.

### முக்கிய அறிவிப்பு

**மனித உரிமைகள் மீட்பு பத்திரிக்கை சங்கங்கள் இல்லை. மனித உரிமைகள் மீட்பு என்பது இந்திய பத்திரிக்கை துறையில் RNI பதிவு பெற்ற பத்திரிகையாகும். சில நபர்கள் மனித உரிமைகள் என்ற பெயரில் அமைப்புகள் மற்றும் சங்கங்கள் போன்று செயல்பட்டால் பத்திரிக்கை நிர்வாகம் பொறுப்பேற்காது.**

**இப்படிக்கு**
**-ஆசிரியர்**




# மகளிர் உரிமைத் தொகை

# குடும்ப தலைவிகளுக்கான உளக்க தொகை...

**"நடைபாதையில் வணிகம் செய்திடும் மகளிர், மீனவ மகளிர், கட்டுமானத் தொழிலில் பணிபுரியும் மகளிர், சிறிய கடைகள், வணிகம், சிறுதொழில் நிறுவனங்களில் சொற்ப ஊதியத்தில் பணிபுரியும் மகளிர், ஒரே நாளில் ஒன்றுக்கும் மேற்பட்ட இல்லங்களில் பணிபுரியும் மகளிர் என பல்வேறு வகைகளில் தங்களது விலை மதிப்பில்லா உழைப்பை வழங்கி வரும் பெண்கள் 'மகளிர் உரிமைத் தொகை' திட்டத்தால் பயன்பெறுவர்" என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.**

*"சமூகத்தில் வெற்றி பெறக்கூடிய ஒவ்வொரு ஆணுக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பார் என்று கூறுவதுண்டு. உண்மையில், ஒவ்வொரு நாளும் தன் திறனுக்கேற்ற பணிபுரிந்து, பொருள் ஈட்டும் ஒவ்வொரு ஆணுக்குப் பின்னாலும், தன் தாய், சகோதரி, மனைவி என அந்த ஆணின் வீட்டுப் பெண்களுடைய பல மணிநேர உழைப்பு மறைந்து இருக்கிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது? ஒரு ஆணின் வெற்றிக்காகவும், தங்கள் குழந்தைகளின் கல்வி, உடல்நலம் காக்கவும் இந்த சமூகத்திற்காகவும் வீட்டிலும், வெளியிலும் ஒரு நாளைக்கு எத்தனை மணி நேரங்கள் அவர்கள் உழைத்து இருப்பார்கள்? அதற்கெல்லாம் ஊதியம் கணக்கிட்டு இருந்தால், இந்நேரம் நம் நாட்டில் குடும்பச் சொத்துகள் அனைத்திலும் சமமாகப் பெண்கள் பெயரும், சட்டம் இயற்றாமலேயே இடம் பெற்றிருக்கும்.*

*இப்படிக் கணக்கில் கொள்ளப்படாத*



உலகில் சில நாடுகளில் ஆங்காங்கே நடைமுறைப்படுத்திய திட்டத்திற்கே இவ்வளவு பயன்கள் கிடைக்கின்றன என்றால், தமிழ்நாட்டில் செயல்படுத்தப் போகும் இந்த மாபெரும் முயற்சி, எதிர்காலத்தில் தமிழ்ச் சமூகத்தில் உருவாக்கப் போகும் பயன்களை, இந்த மாமன்ற உறுப்பினர்கள் ஒரு நிமிடம் எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்.

'இல்லாத ஏழை மக்களுக்கு... இந்த 'மகளிர் உரிமைத் தொகை' வழங்கும் திட்டத்திற்காக, இந்த நிதிநிலை அறிக்கையில் ரூ.7,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருப்பதையொட்டி, எவ்வளவு பேர் பயன்பெறுவார்கள் என்று பலர் மனக்கணக்குப் போட்டு வருகிறார்கள் என்பதை நாம் பார்த்து வருகிறோம். இதுகுறித்து என்னுடைய கருத்தைப் பதிவு செய்வதற்கு முன்னால், ஒன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஊடகம் ஒன்றில், "இந்தத் திட்டத்தின் உதவியைச் செல்வந்தர்களுக்கும், வருமான வரி செலுத்துபவர்கள், அரசு ஊழியர்கள் என அனைவருக்கும் கொடுக்கலாமா?" என்று கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு, 'இல்லாத ஏழை மக்களுக்குக் கொடுத்தால் அவர்களுக்கு வசதியாக இருக்கும்' என்று ஒரு பெண்மணி பதில் சொல்கிறார்.

இந்தத் திட்டம் யாருக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று பொதுமக்களுக்கே தெரிகிறது. 'பகிர்தல் அறம்' என்றும்; 'பசித்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' என்றும்; தமிழ் மரபின் தாக்கத்தால் உருவான நலத் திட்டங்களின் நோக்கமும், தேவையானவர்களுக்குத் தேவையான உதவியை, உரிய நேரத்தில் தேடித் தேடி வழங்குவதில்தான் இருக்கும். 'அனைவருக்கும் வீடு' என்ற திட்டம் அறிவிக்கப்பட்டால், வீடு இல்லாதவர்களுக்கு ஓர் கனவு இல்லம் அமைத்துத் தருவது என்று பொருள். 'அனைவருக்கும் நிலம்' என்றொரு திட்டம் என்றால், நிலமற்ற கூலித் தொழிலாளர்கள், உழுபவர்களுக்கு நிலம் சொந்தம் என்பதுதான் அடிப்படை நோக்கம். 'முதியோர் ஓய்வூதியம்' என்றால், ஆதரவற்ற முதியோரின் நலன் காக்க முனையும் திட்டம் என்று பொருள். அனைவருக்கும் வேலைவாய்ப்பு வழங்கும் திட்டம் என்றால், வேலைவாய்ப்பற்றவர்களுக்கு முன்னுரிமை என்று பொருள்.

அந்த வகையில், இந்த 'மகளிர்

பெண்களின் உழைப்பை முறையாக அங்கீகரிக்கத்தான் 'மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அரசு அங்கீகரித்தால், ஆண்களை உள்ளடக்கிய இந்தச் சமூகமும் பெண்களுக்கான சமஉரிமையை வழங்கிடும் நிலை விரைவில் உருவாகிடும் என்று நமது அரசு உறுதியாக நம்புகிறது. எனவேதான், இந்தத் திட்டத்திற்கு மகளிருக்கான உதவித் தொகை என்று இல்லாமல் 'மகளிர் உரிமைத் தொகை' என்று கவனத்துடன் பெயரிடப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டத்தின் மூலம், வறுமை பாதியாகக் குறைந்திட வாய்ப்பு உண்டு என்றும், கிடைக்கும் நிதியைப் பெண்கள் தங்கள் குழந்தைகளின் கல்விக்கும், ஊட்டச்சத்து மற்றும் மருத்துவச்செலவு செய்திடவும் முன்னுரிமை தருகிறார்கள் எனவும், சிறு சிறு தொழில்களைச் செய்ய முன்வருகிறார்கள் எனவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இவை அனைத்துக்கும் மேலாக, தன்னம்பிக்கை பெறுள்ளார்கள் என்றும் சொல்லப்படுகிறது. பரிசோதனை முயற்சியாக



உரிமைத் தொகைத் திட்டம்' இரண்டு நோக்கங்களைக் கொண்டது. பிரதிபலன் பாராமல் வாழ்நாளெல்லாம் ஓயாமல் உழைத்துக்கொண்டிருக்கும் பெண்களின் உழைப்புக்குக் கொடுக்கும் அங்கீகாரம் முதன்மையானது. அடுத்து, ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை என்பது, பெண்களின் வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக இருந்து, வறுமையை ஒழித்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சுயமரியாதையோடு சமூகத்தில் அவர்கள் வாழ்வதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதாகும்.

யாருக்கெல்லாம் ரூ.1000? மகளிரின் சமூகப் பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக அறிவிக்கப்பட்டிருக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் என்பது, தேவைப்படும் குடும்பத் தலைவிகள் அனைவருக்கும் அவரவர் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும். நடைபாதையில் வணிகம் செய்திடும் மகளிர், அதிகாலையில் கடற்கரை நோக்கி விரைந்திடும் மீனவ மகளிர், கட்டுமானத் தொழிலில் பணிபுரியும் மகளிர், சிறிய கடைகள், வணிகம் மற்றும் சிறுதொழில் நிறுவனங்களில் சொற்ப ஊதியத்தில் பணிபுரியும் மகளிர், ஒரே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட இல்லங்களில் பணிபுரியக்கூடிய பெண்கள் என பல்வேறு வகைகளில் தங்கள் விலைமதிப்பில்லா உழைப்பைத் தொடர்ந்து வழங்கி வரும் பெண்கள் இந்தத் திட்டத்தால் பயன்பெறுவார்கள். இந்தத் திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் விரைவில் வெளியிடப்படும்.

இதனைச் செய்ய முடியுமா? இதற்கு நிதி இருக்குமா என்றெல்லாம், கேள்விகளை எழுப்பி, எங்கே திராவிட முன்னேற்றக் கழக அரசு இதனைச் செய்துவிடுமோ என்ற தங்கள் அச்சத்தை பல்வேறு வகைகளிலே வெளிப்படுத்தி வந்தவர்களுக்கு பதிலளிக்கக்கூடிய விதமாக, தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட சமூகநீதி திட்டங்களிலேயே ஒரு மாபெரும் முன்னெடுப்பாக, வரலாற்றில் விளங்கவுள்ள, இந்த மகத்தான 'மகளிர் உரிமைத் தொகை' வழங்கும் திட்டம் ஏறத்தாழ ஒரு கோடி குடும்பத் தலைவிகளுக்கு, மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கிடும் வகையில் அமைந்திடும் என்பதை இந்த மாமன்றத்தில் மிகுந்த பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூகத்தின் சரிபாதியான பெண்களுக்குச் சமூக விடுதலை பெற்றுத் தந்தது திராவிட இயக்கம் என்றால், பொருளாதாரச் சமத்துவத்தை வழங்குவதுதான் திராவிட மாடல் அரசு என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். மாதம் ஆயிரம் ரூபாய் தங்கள் வாழ்வை சிறிதேனும் மாற்றிவிடும் என நம்பும் எந்தக் குடும்பத் தலைவியையும், மனிதநேய அடிப்படையிலான பெண் உரிமை காக்கக்கூடிய எனது தலைமையிலான திமுக அரசு கைவிட்டுவிடாது" என்று அவர் கூறினார்.

# தனியார் பேருந்துகளில் அதிக கட்டணம்

## ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் குழு அமைக்க வேண்டும்: விஜயகாந்த் வலியுறுத்தல்

தமிழகத்தில் விடுமுறை நாட்களில் தனியார் பேருந்துகளில் டிக்கெட் கட்டணங்கள் தாறுமாறாக உயர்த்தப்படுகின்றன. கடந்த வாரம் மிலாது நபி, வார இறுதி நாட்கள் மற்றும் காந்தி ஜெயந்தி என தொடர் விடுமுறை காரணமாக சொந்த ஊர்களுக்கும், சுற்றுலா தலங்களுக்கும் சென்ற பொதுமக்கள் மீண்டும் சென்னைக்குத் திரும்பியபோது தனியார் பேருந்துகளில் டிக்கெட் கட்டணம் பல மடங்கு வசூலிக்கப்பட்டதால் பெரும் அவதிக்கு உள்ளாகினர்.

விடுமுறை நாட்களில் தமிழக அரசு சார்பில் போதிய பேருந்துகள் இயக்கப்படாததாலும், அரசுப் பேருந்துகள் தரம் இல்லாததாலும் பொதுமக்கள் தனியார் பேருந்துகளில் பயணிக்கின்றனர். இதைப் பயன்படுத்தி தனியார் பேருந்துகள் தொடர்ந்து கட்டணக் கொள்ளையில் ஈடுபட்டு வருகின்றன. இதை தமிழக அரசும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறது.



எனவே, பண்டிகை நாட்களில் தனியார் பேருந்து உரிமையாளர்கள் கட்டணக் கொள்ளையில் ஈடுபடுவதை தடுக்க, தமிழக அரசு ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையிலான குழுவை அமைத்து, தனியார் பேருந்துகளின் கட்டணத்தை நிர்ணயிக்க வேண்டும்.

அதேநேரம், கட்டணக் கொள்ளையில் ஈடுபடும் தனியார் பேருந்துகளின் உரிமையாளர்கள் மீதும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு கூறியுள்ளார்.





# 2024 தேர்தலில் திமுக - பாஜக இடையேதான் போட்டி

## ஆலோசனைக் கூட்டத்துக்குப் பின் அண்ணாமலை உறுதி

**திமுகவா, பாஜகவா என்பதுதான் சவால். திமுக தமிழகத்தில் ஆளுங்கட்சியாக இருக்கிறது. பாஜக மத்தியில் ஆளுங்கட்சியாக இருக்கிறது. போட்டி எங்கள் இருவருக்கும்தான். 2024 தேர்தலில் அதை பார்த்துவிடலாம் என்று பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.**

சென்னை அமைந்தகரையில் உள்ள தனியார் மண்டபத்தில், தமிழக பாஜகவின் மாவட்டத் தலைவர்கள் மற்றும் மாநில நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மாநிலத் தலைவர் அண்ணாமலை, மூத்த தலைவர்களான பொன்.ராதாகிருஷ்ணன், ஹெச்.ராஜா, வானதி சீனிவாசன், கேசவ விநாயகம் மற்றும் மாநில துணைத் தலைவர்களான கரு.நாகராஜன், கே.பி.ராமலிங்கம், வி.பி.துரைசாமி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்துக்குப் பின்னர், பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம்,இன்றைய ஆலோசனைக் கூட்டத்தில், தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது குறித்து முடிவெடுக்கப்பட்டதா என்று கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், "அதை எதற்கு ஊடகங்களிடம் சொல்ல வேண்டும். தமிழக மக்களிடத்தில் எப்போது சொல்ல வேண்டுமோ, அப்போது சொல்கிறேன். பாஜக கட்சி எப்படி தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டும். எந்தப் பாதையில் செல்ல வேண்டும். 2024 தேர்தலை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பது, ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில் விவாதிக்கப்பட வேண்டிய விஷயம் கிடையாது. கட்சியின் தலைவர்களுடன் உள்ளரங்கில் விவாதிக்கப்பட வேண்டிய நிகழ்வு.

பாஜகவைப் பொறுத்தவரை, தேசிய ஜனநாயக கூட்டணி 1998ல் ஆரம்பிக்கப்பட்டது. 25 ஆண்டுகளுக்கு மேலாக என்டிஏ இருக்கிறது. வெவ்வேறு காலக்கட்டத்தில் என்டிஏவின் தன்மை மாறியிருக்கிறது. நிறைய கட்சிகள் வந்துள்ளனர்.நிறைய கட்சிகள் சென்றுள்ளனர். நிறைய கட்சிகள் பரிமாணத்தோடு மீணடும் வந்திருக்கின்றனர். தேசிய ஜனநாயக கூட்டணி 2024ல், தமிழகத்தில் பிரதமர் நரேந்திரமோடிக்காக மிகப்பெரிய அளவில் இங்கிருந்து மக்களவை உறுப்பினர்களை அனுப்பிவைக்கும். மற்றபடி இந்தக் கூட்டத்தில் என்ன பேசினோம். தலைவர்கள் என்ன பேசினார்கள் என்பது எல்லாம் பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவிக்க வேண்டிய விஷயம் இல்லை.

பாஜகவைப் பொறுத்தவரை, என்டிஏவை

பிரதானப்படுத்திச் செல்கிறோம். 2024ல் பாஜக நிச்சயமாக, தேசிய ஜனநாயக கூட்டணி மூலம் தமிழகத்தில் மிகப்பெரிய மாற்றத்தை இங்கு முன்னெடுக்கும். அதற்கான அறிகுறிகள் தேர்தலுக்கு முன்பே தெரியும். 2024ல் வெற்றி பெற்ற வேட்பாளர்கள் மற்றும் வாக்கு சதவீதத்தையும் நீங்களும் பார்க்கத்தான் போகிறீர்கள்" என்றார்.

அப்போது, பாஜகவுடன் அதிமுக இல்லை என்று வருத்தப்படுகிறீர்களா என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், "இதில் வருத்தப்படுவதற்கு ஒன்றும் இல்லை. அந்தந்த கட்சிகள், அந்தந்த கட்சியின் வளர்ச்சியைத்தான் பார்க்கவேண்டும். பாஜக தன்னுடைய வளர்ச்சியைப் பார்க்கிறது. இதில் வருத்தப்படவோ, சந்தோஷப்படவோ ஒன்றும் இல்லை. நான், ஒருவர் இருக்கிறார் என்பதற்காக சந்தோஷப்பட்டதும் இல்லை, சென்றுவிட்டனர் என்பதற்காக வருத்தப்பட்டதும் இல்லை.

என்னுடைய ஒரே நோக்கம், பாஜக வலிமை அடைய வேண்டும் என்பது மட்டும்தான். அதுவே தலைவர்கள் மற்றும் தொண்டர்களின் நோக்கமாக இருக்கிறது. 2024 என்பது பிரதமர் நரேந்திர மோடிக்கான தேர்தல். அவர் மீண்டும் பிரதமராக வரவேண்டும் என்பதற்கான தேர்தல். தமிழகத்தில் 2024ல், தமிழகத்தில் 39க்கு 39 நரேந்திர மோடியின் பக்கம் வரும்" என்றார்.

அதிமுக தலைவர்களை விமர்சிப்பதாக, உங்கள் மீது குற்றம்சாட்டி கூட்டணி உடைக்கப்பட்டுள்ளதே என்பது தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், "என் மீது இந்த குற்றச்சாட்டு மட்டும் இல்லை. தமிழகத்தில் உள்ள பல கட்சிகள், பல குற்றச்சாட்டுகளை கூறுகின்றனர். அதற்கெல்லாம் பதிலளிப்பது எல்லாம் சரியாக இருக்காது. என்னுடைய வேலையை நான் செய்து கொண்டிருக்கிறேன். நான் செல்ல வேண்டிய பாதையில் தெளிவாக இருக்கிறேன். எந்தப் பாதையில் பாஜக செல்ல வேண்டும் என்பதிலும் தெளிவாக இருக்கிறேன்.

எனவே, என் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள், அவதூறுகள் குறித்து நான் பொருட்படுத்துவது இல்லை. அதற்கெல்லாம் நான் பதிலும் சொல்லவில்லை. எனவே, இந்த கேள்விக்கு பதில் சொல்ல விரும்பவில்லை" என்றார்.

அதிமுக கூட்டணி முறிவு குறித்து அக்கட்சியினர் கருத்துக் கூறி வரும் நிலையில், பாஜக அமைதி காப்பது ஏன் என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், "இதில் அமைதி காப்பதற்கு ஒன்றும் இல்லை. எங்களைப் பொறுத்தவரை, 2024ல் எங்கள் கட்சியைச் சார்ந்த பிரதமர் நரேந்திர மோடிக்கான தேர்தல். இது எங்களுடைய கல்யாணம், எங்களுக்கான தேர்தல். அதற்கான வேலைகளை நாங்கள் செய்யப் போகிறோம்" என்றார்.

அப்போது அதிமுகவின் வெற்றிக்கு பாஜக தடையாக இருந்ததா என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், "இதற்கு எல்லாம் ஒரே தீர்வு, 2024 தேர்தல் முடிவுகள்தான். அந்த முடிவு தெரியாமல், யார் வேண்டுமானாலும், என்ன வேண்டுமானாலும் கூறலாம். உள்ளாட்சி மற்றும் நகராட்சித் தேர்தல்களில் பாஜக தனியாக சென்றதால்தான், மூன்றாவது பெரிய கட்சியாக உருவாகியது. எனவே,



2024 தேர்தல் முடிவுகள் வரட்டும். இது மோடி மூன்றாவது முறையாக பிரதமராக வரவேண்டும் என்பதற்கான தேர்தல். எனவே இந்த தேர்தல் முடிவுகள், பாஜகவுக்கும், தேசிய ஜனநாயக கூட்டணிக்கும் ஆதரவாகத்தான் இருக்கும்" என்றார்.

அப்போது அவரிடம் அதிமுகவா, பாஜகவா என்று சவால் விடுக்கிறீர்களா என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், "திமுகவா, பாஜகவா என்பதுதான் சவால். திமுக தமிழகத்தில் ஆளுங்கட்சியாக இருக்கிறது. பாஜக மத்தியில் ஆளுங்கட்சியாக இருக்கிறது. போட்டி எங்கள் இருவருக்கும்தான். இதை நான் கடந்த இரண்டு ஆண்டுகளாக கூறி வருகிறேன். இன்றைக்கு மட்டும் சொல்லவில்லை. திமுகவா, பாஜகவா என்று சவால். 2024 தேர்தலில் அதை பார்த்துவிடலாம்" என்று அவர் கூறினார்.




# புகையிலை பொருட்கள் மீதான தடை மேலும் ஓராண்டு நீட்டிப்பு

**தமிழகத்தில் புகையிலைப் பொருட்கள் மீதான தடை மேலும் ஓராண்டுநீட்டிக்கப்பட்டுள்ளது. கடந்த 2 ஆண்டுகளில் ரூ.12.56 கோடி மதிப்புள்ள 191.1 டன் குட்கா, பான் மசாலா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.**

*இதுதொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி பொதுமக்களுக்கு தரமான, பாதுகாப்பான உணவு வழங்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு தமிழ்நாடு உணவு பாதுகாப்புத் துறை பல்வேறு நடவடிக்கைகளை உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் 2006ன் படி, மேற்கொண்டு வருகிறது.*

*உணவகங்களில் சோதனை: தமிழகம் முழுவதும் கடந்த ஆக.28ம் தேதி முதல் அனைத்து மாவட்டங்களிலும் ஷவர்மா, மீன் மற்றும்அனைத்து வகையான இறைச்சி உணவுகளை விற்பனை செய்யும்15,236 உணவகங்களை ஆய்வுசெய்து, 1,572 உணவகங்களில் தரமற்ற உணவு விற்பனை செய்வதுகண்டறியப்பட்டு, 5,018 கிலோ தரமற்ற இறைச்சி பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டது. ரூ.8,79,800 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. 23கடைகளுக்கு சீல் வைக்கப் பட்டது.*



*மேலும், தேங்காய் சட்னி, தயிர் மற்றும் மோர் ஆகிய உணவு பொருட்களின் தரம் குறித்தும் சிறப்பு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு 7,760 கடைகளில் நடத்தப்பட்ட ஆய்வில் 238 கடைகளில் தரம் குறைவாக உள்ளது கண்டறியப்பட்டு, 213 கிலோ பறிமுதல் செய்யப்பட்டு, ரூ.1,47,000 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக தரமற்ற உணவுகள் கண்டறியப்பட்டு அபராதம் விதிக்கப்பட்ட தொகை ரூ.10,26,800 ஆகும்.*

*உச்ச நீதிமன்ற அறிவுரையின்படி, புகையிலை மற்றும் நிகோடினை சேர்மானமாகக் கொண்ட உணவுப் பொருட்கள் மீதான தடையை தமிழ்நாடு அரசு கடந்த 2013ம் ஆண்டு மார்ச் 23ம் தேதி அமல்படுத்தியது. இந்த தடையை ஆண்டுதோறும் நீட்டித்துவருகிறது. அதன்படி, இத்தடையை மேலும் ஓராண்டு நீட்டித்து உணவுப் பாதுகாப்பு துறை உத்தரவிட்டுள்ளது.*

*191.1 டன் பறிமுதல்: கடந்த 2 ஆண்டுகளில் சுமார் ரூ.12.56 கோடி மதிப்புள்ள 191.1 டன் அளவிலான குட்கா, பான்மசாலா கைப்பற்றப்பட்டுள்ளது. 603 உணவுமாதிரிகள் பகுப்பாய்வுசெய்யப்பட்டு,535உணவு மாதிரிகள் பாதுகாப்பற்றது என அறிக்கை பெறப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, ரூ.21.2 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. 35 உணவு மாதிரிகள் தரம் குறைவானது என அறிக்கை பெறப்பட்டு உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு ரூ.2.93 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.*

*கடந்த இரண்டு ஆண்டுகளில் உணவு நிறுவனங்களில் 1,67,986இணையவழி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளன. 48,217 உணவு மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, 2,975 உணவு மாதிரிகள் பாதுகாப்பற்றது எனவும், 9,720 உணவு மாதிரிகள் தரமற்றது எனவும், பகுப்பாய்வறிக்கை பெறப்பட்டது.*

*அதனடிப்படையில், உரிமையியல் நீதிமன்றத்தில் 9,093 வழக்குகள் தொடரப்பட்டு ரூ.7.97 கோடி அபராதமும், குற்றவியல் நீதி மன்றத்தில் 2,063 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு ரூ.3.40 கோடி அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*



# இடைநிலை ஆசிரியர் ஊதிய முரண்பாட்டை களைய ஓபிஎஸ் வலியுறுத்தல்

**இடைநிலை ஆசிரியர்களின் ஊதியமுரண்பாட்டை களைய நடவடிக்கை எடுப்பதுடன், பகுதி நேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலினை, முன்னாள் முதல்வர் ஓபிஎஸ் வலியுறுத்தியுள்ளார்.**

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: மாணவ, மாணவியருக்கு கல்வி நன்கு கற்றுத்தரப்பட வேண்டுமெனில், ஆசிரியர்கள் மனநிலை நன்றாக இருக்க வேண்டும். ஆனால், கடந்தஇரண்டரை ஆண்டு திமுக ஆட்சியில் இடைநிலை ஆசிரியர்கள், சிறப்பாசிரியர்கள் மன உளைச் சலுக்கு ஆளாகியுள்ளனர்.



வாக்குறுதிகளில் 95 சதவீதம் நிறைவேற்றிவிட்டதாக கூறும் திமுக அரசு, ஆசிரியர்களின் முக்கியமான கோரிக்கைகளை கிடப்பில் போட்டிருப்பது வேதனையளிப்பதாகும். இது மாணவ, மாணவியரின் கல்வியை பாதிக்க வழிவகுக்கும். முதல்வர் இதில் உடனடியாக தலையிட்டுமேலும்காலம்தாழ்த்தாமல் இடைநிலைஆசிரியர்களின் ஊதிய முரண்பாட்டை உடனே களையவும், பகுதிநேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



# நான் இயக்க நினைக்கும் ஹீரோ விஜய் சேதுபதி

**தான் இயக்க வேண்டும் என நினைத்த முதல் ஹீரோ விஜய்சேதுபதிதான் என்று நடிகர் ஜெயம் ரவி தெரிவித்துள்ளார்.**

ஜெயம் ரவி ஹீரோவாக நடித்துள்ள படம் 'இறைவன்'. இதில் நயன்தாரா நாயகியாக நடித்துள்ளார். 'தனி ஒருவன்' படத்துக்குப் பிறகு நயன்தாராவும் ஜெயம் ரவியும் இதில் மீண்டும் இணைந்துள்ளனர். யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்கிறார். 'வாமனன்', 'என்றென்றும் புன்னகை', 'மனிதன்' உள்ளிட்ட படங்களை இயக்கிய அஹமத் இதனை இயக்கியுள்ளார்.

ஹரி கே.வேதாந்த் ஒளிப்பதிவு செய்ய, மணிகண்ட பாலாஜி எடிட்டிங் பணிகளை மேற்கொள்கிறார். இப்படத்தின் ட்ரெய்லரை படக்குழு சமீபத்தில் வெளியிட்டது. இந்த நிலையில் இப்படத்தின் பத்திரிகையாளர் சந்திப்பு நிகழ்வு சென்னையில் நடைபெற்றது. இதில் படக்குழுவினர் கலந்து கொண்டு பேசினர்.

இதில் ஜெயம் ரவி பேசியதாவது: "இறைவன் என்றாலே அன்புதான். எதற்காக இந்தப் பெயர் வைத்தீர்கள் என என்னிடம் நிறைய பேர் கேட்டார்கள். இந்தத் தலைப்பை இயக்குநர் சொன்ன போது, 'இன்னுமா யாரும் இந்த தலைப்பை வைக்கவில்லை?' என்று எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அன்பை கொடுக்கும் இறைவனை ஏன் தலைப்பாக வைக்கவில்லை என்று தோன்றியது. இந்த அன்பில்தான் படம் தொடங்கியது. கரோனா காரணமாக 'ஜனகன மண' திரைப்படம் பாதியில் நின்றது. அதன் பின்புதான் 'இறைவன்' தொடங்கியது. நான் பார்த்த முதல் நடிகன் ரவிதான் என விஜய் சேதுபதி சொன்னார். ஆனால், நான் இயக்க வேண்டும் என நினைத்த முதல் ஹீரோ விஜய்சேதுபதிதான். சீக்கிரம் எனக்கு கால்ஷீட் கொடுங்கள்.

ஹெச்.வினோத் படங்கள் திரைத்துறையை புரட்டிப் போட்டவை. அவருக்கும் நன்றி. இயக்குநர் அஹமதின் அன்பும் நட்பும் எனக்கு எப்போதும் தேவை. 'பொன்னியின் செல்வன்' படம் முடித்து விட்டு என்ன செய்ய போகிறாய் என்று என் அண்ணன் கேட்டார். ஏன் 'தனி ஒருவன் 2' பண்ண மாட்டாயா? என்று நான் திருப்பி கேட்டேன். அப்படி ஒரு அண்ணன் இருக்கும் போது எல்லாமே எனக்கு ஜெயம்தான்" இவ்வாறு ஜெயம் ரவி பேசினார்.



# ஒரு கையில் பெரியார்.. மறுகையில் பிள்ளையார்

## பாலாவின் 'வணங்கான்' ஃபேர்ஸ்ட் லுக்

**பாலா இயக்கத்தில் அருண் விஜய் நடித்துள்ள 'வணங்கான்' படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகியுள்ளது.**

கடந்த ஆண்டு சூர்யாவை வைத்து இயக்குநர் பாலா தொடங்கிய படம் 'வணங்கான்'. ஒரு ஷெட்யூல் படப்பிடிப்பு நடந்து முடிந்த நிலையில், திடீரென படம் கைவிடப்பட்டது. பின்னர், இந்தப் படத்தில் இருந்து சூர்யா விலகினார். இதையடுத்து. இந்தப் படத்தில் சூர்யாவுக்கு பதில் அருண் விஜய் ஒப்பந்தமாகி நடித்து வருகிறார். அவருக்கு ஜோடியாக ரோஷினி பிரகாஷ் நடிக்கிறார். மிஷ்கின் முக்கியக் கதாபாத்திரத்தில் வருகிறார். படத்துக்கு ஜி.வி.பிரகாஷ் குமார் இசையமைக்கிறார். படத்தை பாலாவின் தயாரிப்பு நிறுவனமான 'பி ஸ்டூடியோஸ்' நிறுவனம் தயாரித்து வருகிறது.

கன்னியாகுமரி, திருவண்ணாமலை சுற்று வட்டாரப் பகுதிகளல் நடைபெற்று வரும் படப்பிடிப்பு தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. இந்த நிலையில் படத்தின் முதல் பார்வை போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. இதில் உடல் முழுவதும் சகதியுடன் அருண் விஜய் வலது கையில் பெரியார் சிலையையும், இடது கையில் பிள்ளையார் சிலையையும் வைத்திருக்கிறார். இந்த போஸ்டர் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது



# சிம்பு படத்துக்கு ரகசிய டெஸ்ட் ஷூட் !

வெங்கட் பிரபு இயக்கத்தில் சிம்பு நடித்த, 'மாநாடு' படம் வெற்றி பெற்றதை அடுத்து, 'வெந்து தணிந்தது காடு', 'பத்து தல' படங்களில் நடித்தார் சிம்பு. அடுத்து தேசிங்கு பெரியசாமி இயக்கும் படத்தில் நடிக்க இருக்கிறார். இவர், 'கண்ணும் கண்ணும் கொள்ளையடித்தால்' படத்தை இயக்கியவர். இதை கமல்ஹாசனின் ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் தயாரிக்கிறது. சிம்புவின் 48 வது படமான இது பீரியட் ஆக்‌ஷன் கதையைக் கொண்ட படம். இதற்காக நீண்ட தலைமுடி வளர்த்துள்ள சிம்பு, தாய்லாந்து சென்று, தற்காப்புக் கலை கற்றுக்கொண்டு வந்தார்.

இந்நிலையில் இந்தப் படத்தின் டெஸ்ட் ஷூட் சமீபத்தில் சென்னையில் ரகசியமாக நடந்துள்ளது. விரைவில் படம் பற்றிய அறிவிப்புடன் சிம்புவின் கேரக்டர் தோற்றம் வெளியிடப்படும் என்று தெரிகிறது. இதன் படப்பிடிப்பு வருகின்ற நவம்பர் மாதம் தொடங்க இருக்கிறது.

Owned and Published by M.ABDUL RAHMAN from No.61, Venkata Mesthiri Street, Mannadi, Chennai-600 001 and Printed S.ALI MOHAMED SAYEED by J.M.PROCESS, at 22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-600 014. Editor: K.MADHUSUDHANAN

# ‘அயலான்’ படத்தில் தனித்துவ அனுபவம்: வியக்கிறார் ரகுல் ப்ரீத் சிங்

நடிகை ரகுல் ப்ரீத் சிங், தமிழில் ‘தீரன் அதிகாரம் ஒன்று’, ‘தேவ்’, ‘என்.ஜி.கே’ உட்பட சில படங்களில் நடித்துள்ளார். கமல்ஹாசனின் ‘இந்தியன் 2’ படத்தில் நடித்துள்ள அவர், சிவகார்த்திகேயனுடன் ‘அயலான்’ படத்திலும் நடித்திருக்கிறார். தீபாவளிக்கு ரிலீஸாக இருந்த இந்தப் படம் அடுத்த வருடம் பொங்கலுக்கு வெளியாக இருக்கிறது.

ரவிகுமார் இயக்கியுள்ள இந்த சயின்ஸ் பிக்‌ஷன் படம் பற்றி பேசிய ரகுல் ப்ரீத் சிங் கூறும்போது, “இது வழக்கமான திரைப்படம் இல்லை. சயின்ஸ் பிக்‌ஷன் படம் என்பதால் வாழ்நாளில் ஒரு முறை மட்டுமே கிடைக்கும் அனுபவம் இதில் கிடைத்தது. அதை என்னால் விவரிக்க முடியாது. ரசிகர்கள் நம்பும்படியாக இதன் கதையைப் படமாக்கி இருக்கிறார்கள். கிராபிக்ஸுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதற்கான வேலையும் அதிகம். அதனால் இந்தப் படம் தனித்துவமான அனுபவத்தைத் தந்தது. நான் அதை முழுமையாக ரசித்தேன்” என்று தெரிவித்துள்ளார்.

‘அயலான்’ படத்தில் சரத் கெல்கர், இஷா கோபிகர், பானுப்பிரியா, யோகிபாபு, கருணாகரன் உட்பட பலர் நடித்துள்ளனர். ஏ.ஆர்.ரஹ்மான் இசை அமைத்துள்ளார். நீரவ் ஷா ஒளிப்பதிவு செய்துள்ளார்.



MANITHA URIMAIGAL MEETPU Tamil Fortnightly, November 1-15-2018
Regd. with the Registrar of News Papers for India under No. TNTAM / 2017 / 74330 / R.Dis.481 / 17

# அழகே அடக்கி வை

வெகு காலமாய்
உன்னை சுற்றி, சுற்றி
நான் வந்த போது
ஏன் என்னை தினமும் சுற்றுகிறாய்
என்று நீ கேட்டாய்?

அப்போது நான் நெஞ்சுவலியில்
துடித்து அப்படியே விட்டேன்.
உடனே நீ பதறிப்போய்
ஏன் உனக்கு என்னாச்சி என்றாய்?

அப்போது நான் கோவிலுக்கு
சென்று அம்மனை சுற்றிக்கொண்டு
இருக்கும் போது
ஏன் என்னை சுற்றுகிறாய்
என்று அந்த அம்மன் கேட்டால்?

பக்தனுக்கு நெஞ்சுவலி
வராமல் என்ன செய்யும் என்று..

நான் சொல்லிக்கொண்டு
இருக்கும் போதே..
நீயும் தெய்வத்தை போல் மறைந்து

பிறகு நீ பிள்ளையார்
கோவிலுக்குப் போய் விட்டு
வரும் போதுஇனிமேல்
ஆண் சாமிகள் இருக்கும்
கோவிலுக்கு போகாதே என்றேன்.
உடனே என் என்று நீ பதறி கேட்டாய்?

நீ கண்ணை மூடி அந்த பிள்ளையாரை
வணங்கும் போது
அந்த தெய்வம் கூட
கண்ணைத் திறந்து
ரசிக்கிறார் என்றேன்...

அட... ஆண்டவா என்று
சொல்லிக் கொண்டு ஓடி விட்டாய்.

அன்று இரவு விழிப்பு
நீ எழுந்து பார்த்த போது
அப்போது உன் அருகில்
நான் உன்னை பார்த்தபடி
அமர்ந்திருந்தேன்
அப்போது நீ என்னை
தூங்கவில்லையா என்றாய்?

முதலில் உன் அழகெல்லாம்
தூங்க வைத்துவிட்டு

அப்புறம் நீ தூங்க வேண்டும் என்றேன்.

பிறகு அதிகாலையில்
நான் ஆசையாய் வாங்கி
தந்திருந்த ஒரு அன்பளிப்பை
நீ எதார்த்தமாய்
உடைத்து விட்ட போது
அழுகை வந்துவிட்டது உனக்கு.

அப்போது நான்,
நீ சிந்தும் கண்ணீர்த்துளிகளே
என் உள்ளங்கையில்
நான் ஏந்தியபடி
விலை மதிப்பில்லாத
உன் கண்ணீர்த்துளிகள்
என் கையில் உடைகிறதே...
உடைகிறதே என்று கூச்சலிட்டேன்...

விழித்த பிறகுதான் தெரிந்தது
எல்லாம் கற்பனை என்று...

- M. அப்துல்ரகுமான் (வழக்கறிஞர்)
நிறுவனர்
மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்
மனித உரிமைகள் மீட்பு
95434 10000